## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) 2019 ஆண்டு உலக காடுகள் தினத்தின் கருப்பொருள் என்ன ? What is the theme of the 2019 International Day of Forests?**

**[A]** காடுகளும் ஆற்றலும் - **Forests and Energy**

**[B]** காடுகளும் கல்வியும் - **Forests and Education**

**[C]** காடுகளும் நிலைத்திருக்கும் நகரங்களும் - **Forests and Sustainable Cities**

**[D]** காடும் வாழ்வும் - **Forests and Life**

- ✓ உலக காடுகள் தினம் ஆண்டுதோறும் மார்ச் ஆம் தேதி, உலகின் எல்லா விதமான காடுகளின் முக்கியத்துவதைப் பற்றிய விழிப்புணர்வை வளர்க்க கொண்டாடப் படுகிறது.
- ✓ வறுமை ஒழிப்பிலும், உணவுப்பாதுகாப்பிலும், சுற்றுச்சூழல் நிலைப்பதற்கும் காடுகள் செய்து வரும் இன்றியமையாத பங்களிப்பை முன்னிலைப்படுத்தி விழிப்புண்டாக்கவே இக்கருப்பொருள் முயல்கிறது. காடுகளும் கல்வியும் என்பதுவே இவ்வாண்டின் கருப்பொருள்.
- ✓ இவ்வாண்டு "உலக காடுகள் தினம்" மக்கள் காடுகளை நேசிக்க கற்றுத் தரும் முயற்சிகளை ஊக்குவிக்கிறது. நீடித்த காடு மேலாண்மையையும், பல்லுயிர் பாதுகாப்பையும் பேண, மக்களுக்கு எல்லா தளங்களிலும் பயிற்றுவிக்கப்படும்.
- ✓ ஆரோக்கியமான காடுகளின் வளர்ச்சி, ஆரோக்கியமான , நிலைத்த சமுதாயத்திற்கும், வளமான பொருளாதாரத்திற்கும் வழிகோலும்.

**2) 2019 ஆம் ஆண்டின் “வ்யாஷ் சம்மான்” விருதினர் யார்?**

**[A]** லீலாதர் ஜகுடி

**[B]** சுரேந்திர வர்மா

**[C]** மம்தா காலியா

**[D]** விஷ்வநாத் ப்ரசாத் திவாரி

- ✓ ஹிந்தி எழுத்தாளர் லீலாதர் ஜகுடி தனது “ஜித்னே லோக் உட்னே ப்ரேம்” கவிதைத் தொகுப்பிற்காக, கேகே பிர்லா ஃபவுண்டேசன் வழங்கும், **2018** ஆம் ஆண்டிற்கான “வ்யாஷ் சம்மான்” விருதினை பெறுகிறார்.
- ✓ இலக்கியவாதி விஷ்வநாத் ப்ரசாத் திவாரி தலைமையேற்ற சயான் சமிதி குழுவால், **2013**இல் வெளியான இக்கவிதைத் தொகுப்பு தேர்வு செய்யப்பட்டது.
- ✓ உத்தர்காண்ட் மாநிலத்தின், தெக்ரி கர்ஹ்வால் பகுதியின் தங்கல் கிராமத்தில் பிறந்த திரு ஜகுடி, **2004** இல் பத்மஸ்ரீ விருது பெற்றுள்ளார். இவர் வாங்கிய மற்ற விருதுகள். சாகித்திய அகாடெமி விருது,

ஆகாஷவாணி தேசிய விருது, உத்திரபிரதேச ஹிந்தி விருது, மற்றும் உத்தர்காண்ட் கவுரவ் சம்மான் விருது.

- ✓ **1991** இல் துவங்கப்பட்ட "வ்யாஷ் சம்மான்" விருது, ஹிந்தி இலக்கியத்திற்கு, கடந்த பத்து வருடங்களில், ஒப்பற்ற பங்களிப்பை வழங்கிய , இந்திய எழுத்தாளருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருதின் பரிசுத் தொகை நான்கு லட்சம் ருபாய்கள்.

**3) 2019** ஆம் ஆண்டு **SAFF** பெண்கள் முதன்மையாட்டத்தில் எந்த நாடு முதலிடத்தைக் கைப்பற்றியது**?**

**[A]** மியான்மர்

**[B]** பூட்டான்

**[C]** இந்தியா

**[D]** நேபால்

- ✓ **SAFF** பெண்கள் கால்பந்து முதன்மையாட்டத்தில் , மார்ச் **22** ஆம் தேதி **2019** இல் பிராட்நகரில் நடந்த இறுதிப்போட்டியில், நேபால் நாட்டை **3-1** என்ற கோல் கணக்கில் இந்தியா வென்றது. இந்தியா இதோடு தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாக வென்றுள்ளது.
- ✓ இந்தியாவின் டால்மியா சிப்பர் அணியின் முதல் கோலை **33** ஆவது நிமிடத்தில் அடித்து, நேபாலின் சபித்ரா பண்டாரி அடித்த கோலை நேர் செய்தார். இரண்டாம் பாதியில், க்ரேஸ் டெங்மெய் **63**ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலையும், அஞ்சு தமங் மூன்றாவது கோலை **76**ஆவது நிமிடத்தில் அடித்தார்.
- ✓ இவ்வெற்றியின் இந்தியாவின் **23** ஆவது நேர் வெற்றியாகும். **2010** இல் துவங்கப்பட்டதிலிருந்து எல்லாப்போட்டிகளிலும் இந்தியா வென்றுள்ளது. ஐந்து முறையும் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.

**4)** சமீபத்தில் செய்திகளில் அறியப்பட்ட ஜிம்மி கார்டர் எந்நாட்டவர்**?**

**[A]** ரஷ்யா

**[B]** ஃப்ரான்ஸ்

**[C]** ஜெர்மனி

**[D]** ஐக்கிய நாடுகள்

- ✓ **94** வயதும், **172** நாட்களும் நிரம்பிய ஐக்கிய நாடுகளின் **39** ஆவது அதிபர் ஜிம்மி கார்டர், ஐக்கிய நாட்டின் வரலாற்றிலேயே, மிக மூத்த வாழும் அதிபர் என்ற சாதனையை செய்துள்ளார்.
- ✓ இச்சாதனை, மறைந்த முன்னாள் அதிபர் ஜார்ஜ் **H.W** புஷ்-இன் சாதனையான **94** வயதும், **171** நாட்களையும் விட ஒரு நாள் அதிகம்.

winmeen.com

✓ இருவரும் **1924** ஆம் ஆண்டு பிறந்தவர்கள். புஷ் ஜூன் **12**இலும், கார்டர் அக்டோபர் **1** இலும் பிறந்தனர். அதிபர் பதவியிலிருந்து இறங்கியபின்பும் பொதுவாழ்வில் இயங்கி வந்த கார்டருக்கு, **2002** ஆம் நோபல் அமைதிப் பரிசு அவரது “கார்டர் செண்டர்” நிறுவனத்தின் சேவைக்காக வழங்கப்பட்டது.

**5) எந்நாட்டின் ஆய்வாளர்கள் சிக்கனமான முறையில், ஹைட்ரஜன் எரிபொருள் உற்பத்தியைக் கண்டுபிடித்தனர்?**

**[A]** இந்தியா

**[B]** ஐக்கிய நாடுகள்

**[C]** ருஷ்யா

**[D]** ஃப்ரான்ஸ்

✓ அர்கான்ஸஸ் பல்கலைக்கழகமும், அர்கோன் நேசனல் லேப் ஆய்வாளர்களும் இணைந்து, பொருட்செலவு சிக்கனமாகவும், மிக நேர்த்தியாகவும், நீரைப் பிரித்து ஹைட்ரஜன் எரிபொருள் எடுக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளனர்.

✓ விலையுயர்ந்த வினையூக்கிகளை விட சிறந்தவை நிக்கலும் இரும்பும் கலவையில் பெற்ற நேனோ துகள்கள் என்று கண்டுள்ளனர். அதைக்கொண்டு எலக்ட்ரோலைஸிஸ் செய்து ஹைட்ரஜன் எரிபொருளை பிரித்திருக்கின்றனர்.

✓ இந்த கண்டுபிடிப்பு, எலக்ட்ரோலைஸிஸ் முறையில் ஹைட்ரஜன் எரிபொருள் எடுக்கும் முறையை நடைமுறையில் நேர்த்தியாகச் செய்யவும், சிக்கனமாக செய்யவும் வழிவகுக்கும். தற்போதைய செயல்முறைகள் செய்வதற்கு அதிக சக்திதேவை இருக்கிறது.

**6) ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த எந்த பல்கலைக்கழக ஆய்வாளர்கள், எண்ணெய் சுத்திகரிப்புக்கு பயன்பட்ட நீரைத் தூய்மைப் படுத்தும் புதுமுறையை கண்டுபிடித்துள்ளனர்?**

**[A]** ஸ்டான்ஃபோர்ட் பல்கலைகழகம்

**[B]** க்ளெம்சன் பல்கலைகழகம்

**[C]** அர்கான்ஸஸ் பல்கலைகழகம்

**[D]** புர்ட்யூ பல்கலைகழகம்

✓ புர்ட்யூ பல்கலைகழக ஆய்வாளர்கள்(ஒரு இந்திய வம்சாவளி ஆய்வாளர் உட்பட) **Produced water** எனப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு முறையில் கிடைக்கும் ஒரு துணைப்பொருளில் இருந்து எண்ணெய்க் கசடுகளை முழுமையாக நீக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளனர்.

- ✓ இம்முறையில், ஆக்ரிவேட்டட் கார்பன் ஃபோம் பயன் படுத்தப் படுகிறது. இந்த ஃபோம்-ஐ சூரிய ஒளியில் வைக்கும் போது, வெப்பம் உற்பத்தியாகி அதிலிருந்து நீரைச் சுத்திகரிப்பு செய்ய முடியும். இந்த ஃபோம், நீரிலிருந்து எண்ணெய்க் கசடுகளை முழுமையாக நீக்கும்.
- ✓ அஷ்ரீட் மிஷ்ரா, பட்டதாரி ஆய்வு உதவியாளர் கூற்றுப்படி, இது எளிமையான, சுத்தமான, சிக்கனமான முறையாகும். சூழலியல் தற்கட்டுப்பாடுகளின் எல்லா திறன்களையும் பூர்த்தி செய்யும் படியாக இருக்கும் இந்த செயல்முறையில் நீரில் ஒரு லிட்டருக்கு **7.5** மில்லிகிராம் அளவுக்கே கார்பன் மிஞ்சும். மேலும் உறிஞ்சிய எண்ணெயை மீண்டும் வடிகட்டி எடுப்பதும் மிக சுலபம் என்பது கூடுதல் சிறப்பாகும்.
- ✓ இம்முறையின் மூலம் நீரில் கலந்த **95** சதவீத எண்ணெய்யை பிரித்தெடுத்துவிட முடியும். நடைமுறை சுத்திகரிப்பு முறையோடு சேர்த்து இம்முறையையும் செயல்படுத்தும்போது மிகப்பெரிய அளவிற்கு நீரை சேமிக்க முடியும். நிலத்தடி நீர்வளத்தைப் பேணமுடியும்.

**7)** எந்த யூனியன் அமைச்சகம், சமீபத்தில் பொறுப்பு வணிக நடத்தை **(responsible buisness conduct)** பற்றி தேசிய வழிகாட்டுரையை வகுத்தது**?**

**[A]** நிதி அமைச்சகம்

**[B]** ஜவுளித்துறை அமைச்சகம்

**[C]** பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகம்

**[D]** வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

- ✓ பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகம் பொறுப்பு வணிக நடத்தை **(responsible buisness conduct)** பற்றி தேசிய வழிகாட்டுரையை வகுத்தது.
- ✓ இந்த வழிகாட்டுரை வணிகங்கள் தங்களது எழுத்துப்பூர்வமான அறிக்கைக்கும் நடைமுறை சாத்தியங்களுக்கும் இடையேயான வித்தியாசங்களைக் குறைக்க அழுத்தம் கொடுக்கும்படி அமைந்திருக்கிறது. இதற்காக வணிகங்களின் "சமுதாய சூழலிய பொருளாதார பொறுப்புகளைப் பற்றிய **(NVGS)** வழிகாட்டுரையை திருத்தி அமைத்திருக்கின்றது.
- ✓ இதனால் வணிகங்கள் தங்களை நேர்மையாக நிர்வகித்துக்கொள்ளவும், தெளிவான நேர்மையான கணக்குகளை காட்டும்படியாகவும் அமைத்துக் கொள்ள வழியுறுத்தும்.
- ✓ வணிகங்கள் தரமான நீண்டநாள் உழைக்கக் கூடிய பொருட்களையும் சேவைகளையும் விற்க வேண்டும். அதோடு தங்கள் தொழிலாளர் நலனையும் மதித்து மேன்மையாகப் பேணவேண்டும் என்று வலியுறுத்தும்.

**8)** தற்போது இந்தியாவின் கடற்படை ஊழியர் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்**?**

[A] R.ஹரி குமார்

[B] M.S.பவார்

[C] G அசோக் குமார்

[D] கரம்பீர் சிங்

- ✓ துணை கடற்படை தளபதி கரம்பிர் சிங் , அடுத்த கடற்படை ஊழியர் தலைவராக தேர்ந்தெடுக்க பட்டுள்ளார். தற்போதைய தலைவர் சுனில் லன்பா மே **31** இல் ஓய்வு பெற்ற பிறகு சிங் பதவியேற்பார். விசாகப்பட்டினத்தில் கிழக்கு கடற்படையின் **Flag Officer Commanding in Chief**ஆக பணியாற்றுகிறார்.
- ✓ கரம்பிர் சிங் தனது **36** ஆண்டு கால பணியில், ஒரு இந்திய கடலோர காவற்படையின் கப்பலுக்கு தலைவராக இருந்தார். அக்கப்பல் ஏவுகணைகளைத் தாக்கி அளிக்கவும், வணிக கப்பல்களுக்கு பாதுகாப்பாக இருக்கவும் பயன்பட்டது.
- ✓ கடற்படை தலைவர் பதவியென்பது இந்திய கடற்படையின் உயர்த்த பதவி. தளபதி பதவியின் நான்கு நட்சத்திர அந்தஸ்தில் **Navy cables and communication,(CNS)** என்று அறியப்பட்ட பதவி இது.

**9)** ஈஎஸ்பிஎன் **cricinfo** நிறுவனம், நம் நாட்டின் எந்த ஐஐடி கல்லூரியோடு கைகோர்த்து, கிரிக்கெட் விளையாட்டின் புள்ளியியல் தரவுகளை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தோடு மிக நுணுக்கமாக ஆராயும் **superstats** கருவிகளை வடிவமைக்கவுள்ளது?

[A] ஐஐடி பாம்பே

[B] ஐஐடி மெட்ராஸ்

[C] ஐஐடி கான்பூர்

[D] ஐஐடி இந்தூர்

- ✓ மும்பையில் ஈஎஸ்பிஎன் **cricinfo** நிறுவனம் மெட்ராஸ் ஐஐடியோடு இணைந்து கிரிக்கெட் புள்ளியியலை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றும் படியாக **superstats** கருவியை உருவாக்க முனைந்துள்ளது. இதன்மூலம் இயந்திர அறிவுடன் கிரிக்கெட் தரவுகள் துலக்கமாக பெறப்படும்.
- ✓ இக்கருவியின் துணையோடு ஒரு வீரரின், ஒரு அணியின் ஆட்டம் எப்படி போட்டியின் முடிவுகளை மாற்றக்கூடும் என்பதை முன்னறிவிக்கும். **superstats** கள புள்ளியியலையும், ஒரு வீரரின் அதிர்ஷடத்தையும் ஒப்புநோக்கி தரவுகளைத் தரும். மற்ற நடைமுறைத்தரவுகளோடு அதிர்ஷ்ட கணக்கையும் சேர்த்து கணிக்கக்கூடியது இதுவே முதல் முறை.
- ✓ **Superstats**இன் அல்காரிதம்கள், ஒரு வீரரின் அதிர்ஷ்ட வாய்ப்புகளைக் கொண்டு ஆட்டத்தின் போக்கை அது எப்படி பாதிக்கும் என்பதை உடனுக்குடன் அறிந்துகொள்ள உதவும்.

- ஆட்டத்தை கணிப்பதைத் தாண்டியும், ஈஸ்பிஎன் இதுவரை பத்தாண்டுகளுக்கும் மேலாக சேமித்து வைத்திருக்கும் கிரிக்கெட் தரவுகளைக் கொண்டு பந்துக்கு பந்து ஆட்டத்தின் போக்கையும் ஆடுமுறையையும் ஊகித்து தரவுகளைத் தரவல்லது.
- ஐஐடியைச் சேர்ந்த ரகுநாதன் ரெங்கசாமி, மகேஷ் பஞ்சக்நுலா இருவரும் ஈஸ்பிஎன் **cricinfo** உடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**10) 2019ஆம் ஆண்டின் உலக கவிதைகள் தினம் எப்போது கொண்டாடப்பட்டது?**

**[A]** மார்ச் **22**

**[B]** மார்ச் **23**

**[C]** மார்ச் **21**

**[D]** மார்ச் **20**

- உலக கவிதைகள் தினம் ஒவ்வொரு மார்ச் **21** ஆம் தேதியும், மனித மனத்தின் படைப்பூக்கத்தை தனித்தன்மையோடு வெளிப்படுத்த வல்ல கவிதைகளைக் கொண்டாடுவதற்காக துவங்கப்பட்டது.
- **1999**இல் பாரிஸில் நடந்த யுனெஸ்கோவின் முப்பதாவது அமர்வில் கொண்டாட முடிவெடுக்கப்பட்டது.
- இத்தினம், கவிதை அரங்கவாசிப்பின் முக்கியத்துவத்தை மீட்கவும், கவிதைக்கும் மற்ற கலைகளான நாடகம், ஓவியம் இசை நடனம் போன்ற துறைகளுக்கும் நடுவே உறவை மேம்படுத்தவும், கவிதை மீதான நேசத்தை வளர்த்தெடுக்கவும் சிறு பதிப்பகத்தாரை ஊக்குவித்து கவிதைப் புத்தகங்களை பதிப்பிக்க ஊக்குவிக்கவும் அனுஸரிக்கப்படுகிறது.
- இதன்மூலம் கவிதை காலாவதியான கலை என்ற அடையாளத்தை தவறென உணர்த்தி கவிதைகள் ஒரு சமூகம் தன்னை மேம்படுத்திக்கொள்ளவும் தன்னை தனித்துவமாக அடையாளப்படுத்திக்கொள்ளவும் உதவும் கலை என்பதை நினைவில் நிறுத்தவேண்டும்.

winmeen.com